RESEARCH ARTICLE

DOI: 10.54392/ijmrd2611

Asian Research Association

INDIAN JOURNAL OF
MULTILINGUAL RESEARCH AND DEVELOPMENT

# Kerala Kannagi Story Ballads: A Historical Reconstruction Approach

**S. Uma Maheswari** [a, *]

a Manuscript Assistant in Tamil, Oriental Institute of Manuscript Library, University of Kerala, Kariavattom Campus, Thiruvananthapuram, 695581, Kerala, India

*Corresponding author Email: umamaheswarimnr@gmail.com

DOI: https://doi.org/10.54392/ijmrd2611
Received: 07-01-2026; Revised: 11-03-2026; Accepted: 15-03-2026; Published: 24-03-2026

Check for updates

**Abstract:** The narrative forms of the story ballads performed in Kerala reveal significant influences from Puranic narratives. Such Puranic stories may be understood as forms of narrative shaped by religious interactions and social influences. They are constructed around the belief that the deity worshipped by a community possesses extraordinary or supernatural powers. At the same time, the traditional forms of these narratives undoubtedly preserve layers of information that reveal the cultural development and transformation of society. Certain Puranic narratives are also rooted in popular beliefs and religious traditions. In the story ballads performed in Kerala, several fictional episodes that are not directly connected with the original narrative are incorporated into the story. These elements may be understood as narrative additions intended to enhance the flow of the story, its aesthetic appeal, and its emotional intensity. However, traces of social interaction and historical experience can also be identified beneath these narrative layers. Among the Kerala story-ballad traditions are Thorram Paṭṭu performed in the districts of Thiruvananthapuram and Kollam, Nallamma Paṭṭu of Palakkad, Kovilan Charithram sung by the Mannan tribal community, the Kannagi Story of the Kanikkar tribal community, and the Kovalan–Kannagi Story compiled by T. Natarajan. These ballads constitute important regional versions of the Kovalan–Kannagi narrative. Their contents reveal the incorporation of certain Puranic narratives into the traditional story framework. Among the Puranic elements incorporated into these ballads are the story of Bhadrakali's slaying of Daruka, the Shiva–Parvati Puranic narrative, the story of Krishna embracing the Siva Linga, and the episode of Mahadeva swallowing an egg. The presence of these narratives within the ballads concerning Kovalan and Kannagi necessitates an examination of the historical circumstances and cultural processes through which they became integrated into the tradition. These elements cannot be considered to have been incorporated into the ballads during a single period. Rather, they appear to have entered the narratives at different historical stages, shaped by the changing political, religious, and cultural circumstances of each period. The incorporation and transformation of these episodes may therefore be viewed as processes through which the traditional narrative was continuously reconstructed in accordance with changing social contexts. This article examines the Kannagi story ballads of Kerala from the perspective of historical reconstruction theory, focusing on the interaction between mythology, oral tradition, social history, and cultural transformation. It seeks to identify the historical and cultural circumstances under which Puranic elements became integrated into the Kovalan–Kannagi ballad tradition and to examine how these narratives reflect the changing relationship between oral literature and the socio-cultural history of Kerala.

**Keywords:** Kerala Kannagi Story, Mannan tribal community, Kanikkar tribal community, Kovalan Kannagi, history of Kerala

**Language:** **Tamil**

# வரலாற்று மீட்டுருவாக்கக் கோட்பாடு நோக்கில் கேரளக் கண்ணகி கதைப்பாடல்கள்

**ச. உமா மகேஸ்வரி** [அ, *]

[அ] சுவடி உதவியாளர், கீழ்திசை சுவடியியல் ஆய்வு நூலகம், கேரளப் பல்கலைக்கழகம், காரியவட்டம், திருவனந்தபுரம்.

## முன்னுரை

கேரளத்தில் பாடப்படுகின்ற கதைப்பாடல்களின் கதை வடிவங்களில் புராணக் கதைகளின் தாக்கத்தைக் காணமுடிகிறது. புராணக்கதைகள் சமய ஊடாட்டத்தின் விளைவாலும் சமூக தாக்கத்தின் சூழலாலும் ஏற்பட்ட ஒரு கதையாடல் என்றே கருதலாம். அதாவது, சமூகம் வழிபடும் தெய்வம் என்பது அதீத சக்தி கொண்டது என்ற கருத்தாக்கத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட கதையாடல் ஆகும். ஆயினும், இப்புராணக்கதைகளின் தொன்ம வடிவங்கள் சமூகத்தின் பண்பாட்டுப் படிநிலைகளை வெளிக்காட்டும் விதமாகவும் இருக்கும் என்பதில் ஐயமில்லை.

சில புராணக்கதைகள் நம்பிக்கை சார்ந்து அமைவதையும் காணலாம். கேரளத்தில் பாடப்படும் கதைப்பாடல்களில் மூலகதைக்குத் தொடர்பில்லா சில புனைவுகள் கதைக்குள் இடம்பெறுகிறது. அது, கதையின் ஓட்டத்தை இரசனையோடும் மிகுந்த உணர்ச்சிப் பாங்கோடும் கூறுவதற்கு இணைக்கப்படும் கூறாகவே கருத வேண்டியுள்ளது. இதிலும் சில சமூக ஊடாட்டங்களும் வரலாறுகளும் பின்னி இருப்பதை, அதன் பின்னணியில் இருந்து உணரலாம். அவ்வகையில் திருவனந்தபுரம், கொல்லம் மாவட்டத்தில் பாடப்படும் தோற்றம் பாட்டு, பாலக்காடு மாவட்டத்தில் பாடப்படும் நல்லம்மா பாட்டு, மன்னான் பழங்குடிகள் பாடும் கோவிலன் சரித்திரம், காணிக்காரப் பழங்குடிகளின் கண்ணகி கதை, தி. நடராஜன் தொகுத்த கோவலன் கர்ண்ணகை கதை போன்றவை கேரளத்தின் பாடப்படும் கதைப்பாடல்கள் ஆகும். இக்கதைப்பாடலின் கதைகளில் சில புராணக் கதைகள் ஊடே ஊடுருவி இருப்பதை அடையாளம் காணமுடிகிறது.

1. பத்திரகாளி தாருகனை வதம் செய்யும் கதை
2. சிவன் பார்வதி புராணக்கதை
3. கண்ணன் லிங்கத்தைக் கட்டி அணைத்துக்கொள்ளும் கதை
4. மகாதேவன் முட்டை விழுங்கும் கதை

இக்கதைகள் கோவலன் - கண்ணகி பற்றிய கதையினைக் கூறும் கதைப்பாட்டில் இணைக்கப்பட்டுள்ள வரலாற்றுச் சூழலை நோக்க வேண்டிய தேவையும் உள்ளது. இவை ஒரே காலத்தில் இணைந்தது கிடையாது. ஒவ்வொரு காலத்தின் அரசியல், பண்பாட்டுச் சூழல் மாறுபடுகின்ற பொழுது அதனுள், இவை நுழைக்கப்பட்ட முறையெனலாம். ஆகவே, இக்கதைகள் எந்நிலையில் சமூகப் பண்பாட்டோடு இணைந்தது என்பதை இவ்வாய்வு ஆராய்கிறது.

## வரலாற்று மீட்டுருவாக்கக் கோட்பாடு

ஒரு கோட்பாட்டு அணுகுமுறைக்குள் மற்றொரு கோட்பாட்டை உட்படுத்தி நோக்கினால் அதன் விரிவான வரலாற்றையும் சமூகப் பின்புலத்தையும் உணர்வதற்கு எளிமையாக இருக்கும் எனலாம். இதனை, “பல்வேறு குறிக்கோள் முறைகள் ஒருங்கிணைக்க முடியாத ஒன்று என்றும் ஒரு பொதுவான பிரச்சனையை இம்முறையில் ஒருங்கிணைத்து ஆய்வு செய்ய முடியாது என்றும் தவறாக தோன்ற வாய்ப்புள்ளது. உண்மையில் இதில் ஏதாவது ஒரு குறிக்கோள் முறையினை மேற்கொள்வோர் மற்ற முறைகளை மேற்கொள்வோரின் - பால் காட்டுகின்ற வெறுப்புணர்வு ஏதோ இப்பல்வேறு குறிக்கோள் முறைகள் ஒன்றிலிருந்து மாறுபட்டவை என்ற எண்ணத்தைத் தோற்றுவிக்கின்றன. எனவே, ஒரே ஒப்பியல் குறிக்கோளாளர், அமைப்பியல் அல்லது உளவியல் முறையாளரின் அணுகுமுறையில் சிறிதளவு நன்மையைக் கூடக் காண மறுக்கிறார். அதுபோல ஒரு நல்ல அமைப்பியல் குறிக்கோளாளர் கடின உழைப்பின் மூலம் ஓர் ஒப்பியல் குறிக்கோளர் பெற்ற கதைகளில் நூற்றுக்கும் அதிகமான பல்வேறு வடிவங்களைத் துட்டமாக நினைக்கும் நிலை ஏற்ட்டுள்ளது” என ஆ. சிவசுப்பிரமணியன் கூறும் கருத்து முக்கியமானதாகும் (Sivasubramaniyan, 2016).

ஆகவே ஒரு அமைப்பியல் நிலையில் சூழலியல், வரலாற்று நிலவியல், ஒப்பியல், வரலாற்று மீட்டுருவாக்கம் போன்றவையும் அடங்கியுள்ளது என்பதை இவரின் கருத்தின் மூலம் உணரமுடிகிறது. அவ்வகையில் கேரளக் கதைப்பாடல்களின் கதைகளில் வரலாற்று மீட்டுருவாக்கம் செய்து ஆராய்வது தேவையாக இருக்கிறது எனலாம்.

கேரளாவில் பாடப்படும் கதைப்பாடல்களின் கதைகள் பெரும்பாலும் அடிப்படையில் சில வரலாறுகளைத் தன்னகத்தே கொண்டவையாக உள்ளன. அவ்வரலாற்றை வரலாற்று மீட்டுருவாக்கக் கோட்பாடு மூலம் வெளிக்கொணர்வது முக்கியமான நிலையாகும். ஜேக்கப் கிரீம் இக்கோட்பாட்டை பத்தொன்பதாம் நூற்றாண்டில் உருவாக்கினார். இதன் மூலம் உலக அளவில் பல நாட்டுப்புற வழக்காறுகளைப் பயன்படுத்தி அதன் ஆதி வரலாற்றை அறிஞர்கள் மீட்டுருவாக்கம் செய்தனர். எந்த ஒரு நாட்டுப்புற வடிவங்களும் முழுமையாக கற்பனைத் திறத்தால் மட்டும் தோற்றம் பெற்றது என்று

கூற இயலாது. ஏதோ ஒரு வரலாற்று நிகழ்வின் மையநிலையிலிருந்து எழுந்தது என்பதை உணர வேண்டும். அதற்கும் அதன் சமூகம் சார்ந்த ஊடாட்டத்திற்கும் மிகப் பெரிய வரலாற்று இணைப்பு இருப்பதைக் காணலாம்.

“ஆதாரம் கிடைக்காத ஒரு காலகட்டத்தின் வரலாற்றை நாட்டுப்புறவியல் சான்றுகளைக் கொண்டு உருவாக்குவதற்கு வரலாற்று மீட்டுருவாக்கக் கோட்பாடு என்பர்” சு. சக்திவேல் கூறுகிறார் (Sakthivel, 2010).

“Historical Geographical Method” ஆய்வு முறையால் ஒரு கதையின் அல்லது ஒரு வழக்காற்றின் மிகப் பழைய வடிவம் எது என்றும் அது தோன்றிய நாடு எது என்றும் அங்கிருந்து எந்தெந்த நாடுகள் வழியே வேறு நாட்டை அடைந்தது என்பதனையும் அறியலாம் என்பர். இது ஒரு அறிவியல் பார்வை என்றும் அழகியல் பார்வை என்றும் கூறலாம். ஒரு சிக்கலுடைய நாட்டுப்புறக் கதையை வரலாற்று மீட்டுருவாக்கம் செய்ய முயல்கின்றனர்” என்று சு. சண்முகசுந்தரம் கருத்துரைக்கிறார் (Shanmugasundaram, 1989).

வரலாற்று மீட்டுருவாக்கத்தின் பின்னணியை தி. சு. நடராசன் அதன் காலதேவை என்று கூறுவதைக் காணலாம். அதாவது, “வரலாற்றில், தம் இனம் சார்ந்த அரசியல் பொருளாதார நிலைப்பாடுகளையும் பண்பாட்டையும் தமிழ்ச் சமுதாயம் இழந்துபோகிற நிலையில், எதிர்வினைகள் நிகழ்த்தி இழந்தவற்றைத் திரும்பக் கொண்டுவந்து அவற்றை மீட்டுருவாக்கம் செய்கின்ற சிந்தனை" என்று கருதுகிறார் (Sivasubramaniyan, 2016).

வரலாற்று நிலவியல் கோட்பாடு ஒரு கதை தோன்றிய இடத்தில் இருந்து எந்நிலத்தின் வழியாக ஊடுருவி சென்றது என்பதாகும். கிட்டதட்ட வரலாற்றை மீட்டுருவாக்கம் செய்யும் போது அது வளர்ந்த நிலையையும் சென்ற நிலப்பரப்பினையும் அடையாளம் காணஇயலும். உலகளாவிய நிலங்களுக்குச் சென்ற முறை என்பது ஒரு வகையாகும். ஒரு பரந்து பட்ட நிலத்தில் வசிக்கும் ஒரு சமூகத்தின், ஏதேனும் ஒரு பகுதியில் நடைபெறும் நிகழ்வு எவ்வாறு அச்சமூகம் முழுவதும் பரப்பப்படுகிறது என்பது மற்றொரு வகைக்குள் உட்படும் நிலையாகும். வரலாற்றை மீட்டுருவாக்கம் செய்ய முற்படும் பொழுது, சென்ற நிலவியலும் அதற்குள் உட்படும் என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.

ஒரு நிகழ்வு சமூகம் விட்டு சமூகம் மாற்றப்படும் பொழுது பல்வேறு வகையான பிற நிகழ்வுகளை அதற்குள் கொண்டுவர முற்படுவது என்பது காலத்தின் தேவையெனலாம். பின்பு, அச்சமூகம் சார்ந்த கதையாக அதனை மாற்ற முற்படுவதும் நிகழும். அந்நிகழ்வு வேறு தொடர்பில்லாச் சமூகமும் அக்கதையுடன் தன்னை இணைத்துக் கொள்ள முற்படுவதும் உண்டு. இது சமூக மாற்றத்தின் வளர்ச்சியில் ஒருவகையே எனலாம். இதனை பண்பாட்டுப் பரிமாணத்தின் மாற்று கோணமாகவே எடுத்துக் கொள்ள வேண்டும்.

அவ்வகையில் இக்கதைகளில் புராணக் கதைக் கூறுகளைக் கொண்டு அக்கதைகளின் வரலாற்றை மீட்டுரூவாக்கம் செய்யலாம். புராணக் கதைகளைக் கொண்டு அடிநிலை கதைகளின் உண்மை வரலாற்றை மீளாக்கம் செய்ய இயலாது என்பதையும் இங்கு சிந்திக்க வேண்டும். அடிநிலை கதை உருவான பிறகு அடுத்தடுத்த காலகட்டத்தில் சமூகத்தில் ஏற்பட்ட அரசியல், சமூக மாற்றங்களின் வரலாறாகவே அதனை நோக்க வேண்டும். இதன் வரலாற்று பின்புலம் எந்த அளவிற்கு உண்மை என்பதை அதன் மையநிலை செயல்பாடுகளைக் கொண்டே தீர்மானிக்க வேண்டும். ஏனெனில் கதையில் பல்வேறு கற்பனைக் கலந்த சில நிகழ்வுகள் உள்நுழைக்கப் பட்டுள்ளதைக் காணலாம். அது, சமூகத்தின் பல்வேறுப்பட்ட நம்பிக்கையின் அடிப்படையில் நுழைந்திருந்தாலும், அதற்கு ஏதேனும் ஒருவகை நிகழ்வும் காரணமாக அமைந்து இருக்கலாம்.

## பத்திரகாளி தாருகனை வதம் செய்யும் கதை

பத்திரகாளி தேவர்களுக்குக் கொடுமை செய்யும் தாருகனை அழிக்கும் நிகழ்வு பாலக்காடு மாவட்டத்தில் பாடப்படும் நல்லம்மா பாட்டிலும் திருவனந்தபுரம், கொல்லம் மாவட்டங்களில் பாடப்படும் தோற்றம் பாட்டிலும் இடம்பெறுவதைக் காணமுடிகிறது. மூலக்கதையைப் பாடுவதற்கு முன்பே இதனைப் பாடிவிடுகின்றனர்.

திருவனந்தபுரம் பகுதியில் பத்திரகாளிப்பாட்டு என்றே இக்கதை கூறும் பாடலைக் கூறுகின்றனர். இதில் தாருகன் சிவனை நோக்கி தவம் இருக்க, சிவனோ தாருகனுக்கு அழியாவரம் கொடுத்து விடுகிறான். இதனால் தாருகன் தேவர்களைத் துன்பப்படுத்துகிறான் தேவர்கள். சிவனிடம் முறையிட சிவனோ ஏழு கன்னிப் பெண்களைப் படைத்து தாருகனுடன் போரிடுவதற்கு அனுப்புகிறார். இதில் இக்கன்னிப் பெண்கள் தோல்வியைச் சந்திக்கின்றனர். இறுதியில் பத்திரகாளியை அனுப்பி தாருகனைக் கொல்கிறார்.

இதில் முக்கியமானது என்னவெனில் தமிழ்ச் சமூகத்தின் மூத்த இலக்கியமாக இருக்கும் சங்க இலக்கியமோ பெண் போரிட சென்றதாகப் பதிவு செய்யவில்லை என்பதாகும். சங்க சமூகத்தைப் பொறுத்தவரை வீரநிலை என்பது ஆணின் அடையாளமாகவே பேணப்பட்டு வந்துள்ளது. போர் நிலையில் பெண்கள் ஓரங்கட்டப்பட்டு இருந்தனர் என்பதே இலக்கியத் தரவுகளின் மூலமாக அறிகின்ற வரலாறாகும்.

ஆனால், இக்கதையில் சிவன், தாருகன் என்ற ஆணினை அழிக்க, அவனோடு போரிட ஏழு கன்னிப் பெண்களையும் காளியையும் அனுப்புவது சிந்திக்கத்தக்கதாகும். ஆண், ஆணோடு போரிடும் நிலை இருந்த சமூகத்தில், ஆணோடு பெண் போரிடும் சூழல் என்பது அதன் தொன்மையான வரலாற்றை இணைக்கும் முறையெனலாம்.

ஏழு கன்னிப்பெண்கள் என்ற தொன்மம் இன்றும் தமிழகத்தில் இருப்பதைக் காணமுடிகிறது. கருப்பசாமி ஆலயங்களில் இக்கன்னிப் பெண் வழிபாடு காணப்படுவதை மதுரை, புதுக்கோட்டை, சிவகங்கை, திருச்சி போன்ற பகுதிகளில் காணலாம். இக்கருப்பசாமி வழிபாட்டுடன் நாட்டார் மக்கள் இணைந்துள்ள முறையையும் காணமுடிகிறது. மேலும், காளி கோவில்களிலும் இக்கன்னிப் பெண்களைத் தெய்வமாக வழிபடும் வழக்கம் இன்றும் இருப்பதைக் காணலாம்.

இவ்வழிபாட்டு முறையில் இப்பெண் தெய்வங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதையும் காணமுடிகிறது. கருப்பசாமி வழிபாடு தொடங்குவதற்கு முன் இக்கனிப் பெண்களிடம் குறி கேட்கின்றனர். குறி சொன்னால் மட்டுமே வழிபாடு மேற்கொள்ளப் படுவதையும் காணமுடிகிறது. ஆகவே, தாருகன் வதம் என்ற நிகழ்வில் வரும் இக்கன்னிப் பெண்கள் நாட்டார் மக்களின் வாழ்வியலோடு தொடர்புடைய தெய்வங்கள் என்பதை இதன்மூலமாக மீட்டுரூவாக்கம் செய்ய இயலுகிறது.

தமிழகத்தில் மதுரையிலும் புதுக்கோட்டை வட்டாரப் பகுதியிலும் வாழும் மக்கள் இவ்வேழு கன்னிப்பெண்களும் உயிருடன் தங்கள் முன்னோர்களாக வாழ்ந்தவர்களாகக் கருதுகின்றனர். திருமணம் ஆகாத நிலையில் கன்னிப்பெண்களாகவே இருந்து மாண்டுவிட்டதாக இப்பகுதி மக்கள் கருதுவது சிந்திக்கதக்கதாகும். இப்பகுதியில் திருமணம் ஆகாமல் மாண்டுபோகும் பெண் குழந்தைகள் தெய்வமாக அக்குடும்பத்தைக் காப்பதாக நம்புகின்றனர். சில நேரங்களில், இவர்களுக்கு என்று தனித்த வழிபாடும் செய்யப்படுவதைக் காணலாம்.

அதாவது, “புடிமண்” (அப்பெண் இறந்த இடத்தில் மண்ணெடுக்கும் நிகழ்வாகும்) எடுக்கும் சடங்கு நிகழ்த்தப்படும். இறந்துபோன அப்பெண்ணை ஊர்கோவிலில் தெய்வமாகச் சேர்க்கும் வழிபாட்டு முறையாகும். இப்புடிமண் எடுப்பு என்பது வீடு அல்லது பிற இடங்களில் மாண்டு போன ஆண், பெண் இருவருக்கும் எடுக்கும் சடங்கு நிலையாகும். ஆனால், திருமணம் ஆகாத பெண்கள் வீட்டிலே இறந்தாலும் அவர்களுக்கு புடிமண் எடுத்து ஊர்கோவிலில் தெய்வமாக ஆக்கப்படுவதைக் காணமுடிகிறது. அப்பொழுது திருமணத்தின் பொழுது ஒரு பெண்ணுக்கு என்னவெல்லாம் சீர் பிறந்த வீட்டிலும் தாய்மாமன் வீட்டிலும் செய்யப்படுமோ அது போலவே அனைத்தும் செய்து, புடிமண் எடுத்து ஊர் ஆலயத்தில் இணைப்பர். அப்பெண் கன்னி தெய்வமாகக் காக்கும் என்பது நம்பிக்கையாகும்.

தமிழகத்தில் நாகை வட்டாரத்தில் நிகழ்த்தப்படும் ஏழு கன்னிமார் வழிபாட்டு சடங்கினை ஆ. தனஞ்செயன் ஆய்வு செய்துள்ளார். இதில் “இம்மக்களிடையே காணப்படும் ஏழு கன்னிமார் வழிபாட்டினைப் பொறுத்தவரையில் சுமார் நான்கு வகையான கூறுகள் இன்றியமையாதவை ஆகும். ஏழு என்ற எண்ணிக்கையில் அமைந்த பெண் தெய்வங்கள் அவை பற்றிய புராணம், நம்பிக்கைகள், அவற்றை ஆதாரமாகக் கொண்டு நடத்தப்படும் சடங்கு போன்றவையே அக்கூறுகள் ஏழு செங்கற்களின் வடிவிலும், ஒரே கருங்கல்லில் செதுக்கப்பட்ட புடைப்புச் சிற்பங்களாகவும் ஒரு கன்னிமார் என்றழைக்கப்படும் பெண் தெய்வங்கள் கிராமங்களில் சற்று ஒதுக்குப்புறமான இடங்களில் கோயில் கொண்டு இருக்கின்றன” என்று குறிப்பிடுகிறார் (Dhananjayan, 2015).

ஆகவே, ஒதுக்குபுறமான வழிபாட்டு நிலை என்பது மக்களின் முன்னோர் வழிபாட்டு முறை என்று கருத வேண்டியுள்ளது. ஏனெனில் அனைத்து நாட்டார் தெய்வங்களும் ஊர் எல்லையில் இருப்பதைக் காணலாம். இத்தெய்வங்கள் அம்மக்களைக் காத்து நிற்கின்றது என்ற நம்பிக்கையாகும்.

இது போன்றே தமிழகத்தின் அனைத்துப் பகுதியிலும் ஏழு கன்னிமார் தெய்வ வழிபாடு இருப்பதைக் காணமுடிகிறது. கேரளத்தில் இவ்வழிபாடு என்பது இன்று அடையாளம் காண இயலாத நிலையே இருப்பதை உணர முடிகிறது. பகவதி காவு வழிபாடு தழைத்தோங்கிய நிலையில் பிற வழிபாட்டு முறைகள் பண்பாட்டின் அடையாளங்களாக ஏதேனும் வடிவத்துடன் இணைக்கப்பட்டு உள்ளமையை, அதன் உள்ளாந்த பண்பாட்டு நிலையில் இருந்தே மீட்டுருவாக்கம் செய்ய வேண்டியுள்ளது. ஆயினும், இவ்வழிபாடு கேரளத்தில் இருந்துள்ளமையின் அடையாளமாகவே

கதைப்பாடல்களில் அதன் எச்சநிலை வெளிப்படுகிறது என்பதை உணரலாம். பெரும்பாலும் பெண்மை சார்ந்த கருத்து நிலை கேரளாவில் எவ்வகையிலும் காலூன்றி வளரும் என்பதற்கு இதுவும் ஒரு அடையாளச் சான்றாகும்.

கேரளாவும் பழங்காலத்தில் தமிழகத்துடன் இணைந்திருந்த பண்பாட்டு வரலாற்றை உணர வேண்டும். அக்காலத்தில் தமிழ்பேசும் நிலம் முழுவதும் இக்கன்னிமார் வழிபாடு செல்வாக்கு பெற்றிருந்த நிலையையே இது உணர்த்துகிறது. ஆகவே, இத்தொன்மம் கதைப்பாடல் தாருகன் என்ற அரக்கனைக் கொல்ல சிவனால் படைக்கப்பட்டதாக மாற்றப்பட்டுள்ள சூழலையும் ஆராய்ந்து அறியமுடிகிறது. இக்கன்னிப் பெண்கள் உயிரோடு வாழ்ந்திருக்கும் பொழுது அநீதிகளை எதிர்த்ததனால் இறந்தவர்களாக இருக்க வேண்டும். இல்லையெனில் ஏதேனும் ஒரு சூழலில் இப்பெண்கள் வன்செயலாகக் கொல்லப்பட்டிருக்க வேண்டும் என்ற அடையாளமே இதன் மூலம் கிடைக்கும் செய்தியாகும்.

எனவேதான், சமூகம் அப்பெண்களை 'தாருகன்' என்ற கொடுமைக்காரனை அழிக்க முற்படும் செயல் நிலையாக அடையாளப் படுத்துகிறது எனலாம். ஆயினும் அப்பெண்களால் வெற்றி பெற இயலாமல் போய்விட்ட நிலையையே இது எடுத்துக்காட்டுகிறது. அநீதியை எதிர்த்த பெண்களால் வெற்றிபெறாமல் அநீதியாலே மடிந்துள்ளார் என்ற வரலாற்றை இதன்மூலம் ஊகிக்கலாம். எனவேதான், தொன்ம அடையாளமாக மக்களிடையே இக்கதையாடல் நிலவி வருகின்றது.

மையநிலை கதையாடலை விளக்க தாருகன் வதம் கூற வேண்டிய கட்டாயத் தேவை ஏதும் இல்லை என்பதே உண்மை. ஆனால் அதனோடு இணைக்கும் சூழல் என்பது சமூகத்தில் பெண்கள் குறித்த கதையாடல் செல்வாக்கு பெற்று இருந்த நிலையையே காட்டுகிறது எனலாம். மேலும், அத்தொன்மத்தின் வரலாற்று பின்புலம் சமூகத்தின் அனைத்து தரப்பு மக்களிடையே மிகுந்த தாக்கத்தினை ஏற்படுத்தியிருக்க வேண்டும் என்ற உண்மையையும் மறைமுகநிலையில் உணரமுடிகிறது. அதிகாரத்தினை எதிர்த்த ஏழு பெண்களும் சமூக நிலையில் கடவுளாகப் பார்க்கப் பட்டுள்ளனர். இவ்வரலாற்று உண்மையை இதன்மூலம் மீட்டுருவாக்கம் செய்ய இயலுகிறது. இதைச் சமூகத்தின் பண்பாட்டு வரலாறாகவே எடுத்துக் கொள்ள வேண்டும்.

## சிவன் - பார்வதி புராணக் கதை

கேரளத்தில் பாடப்படும் அனைத்து கதைப்பாடல்களின் கதைகளிலும் சிவன் பார்வதி பற்றி கதைகள் இடம்பெறுவதைக் காணமுடிகிறது. இவ்விருரை மையப்படுத்திய மையநிலை கதையும் பின்னப்பட்டுள்ளதை நோக்க வேண்டும். இதில், சிவன் தொன்மை பாத்திரமாக இடம்பெறுகிறது. சிவனே அனைத்து செயல்பாட்டிற்கும் மூலம் என்ற அடிநிலைப்பொருளின் அடிப்படையில் கதையின் போக்கு அமைக்கப்பட்டுள்ளதை ஆராய்ந்து அறியலாம். கதையின் மையநிலை ஒன்றே என்றாலும் சிவனின் குணாதிசயங்கள் சில கதைகளில் மாற்றப்பட்டு உள்ளதையும் காணமுடிகிறது.

கோவிலன் சரித்திரம் என்ற கதையில் சிவனும் பார்வதியும் பூலோகத்திற்கு வருவதாக அமைகிறது. பூலோகத்தில் செல்வச் செழிப்பாக வாழ்ந்து வரும் ஒரு பெண்ணைச் சோதிக்க சிவன் முற்படுகிறார். அப்பொழுது அப்பெண்ணிடம் சிவன் ஆண்டியாகச் சென்று பிச்சை கேட்கும் பொழுது, அப்பெண் சிவனுக்கு மண்ணை இடுவதும், இதனால் சிவன் சாபம் கொடுத்து அப்பெண் செல்வ இழப்பை அடைந்து ஆண்டியாவதையும் கதையில் காணமுடிகிறது.

இது சமூகத்திற்கு சமூகநீதியைப் போதிப்பதாக இருந்தாலும் சைவ சமயத்தின் மேன்மையைக் காட்டுகிறது. அதாவது, சிவன் ஆண்டியாக வருவது என்பது சிவனடியார் ஆகும். சிவனடியார்கள் உணவு கேட்கும்பொழுது உணவு கொடுக்கவில்லை எனில், அவர்களிடம் எவ்வளவு பெருஞ்செல்வம் இருந்தாலும் அழிந்து விடும் என்ற கருத்தினை மக்கள் மத்தியில் கொண்டு செல்லப்படும் முறையாகும். சிவனடியாரைப் பாதுகாக்க வேண்டுமென்ற சிந்தனை மக்கள் மத்தியில் கொண்டு செல்லப்பட்ட நிலை எனலாம்.

மேலும், அப்பெண்ணுக்கு குழந்தை வரம் சிவன் கொடுப்பதைக் காணலாம். இதன் காரணமாக பாண்டிய மன்னன் குழந்தை இல்லாமல் இருக்கின்ற சூழலில் அப்பெண் பாண்டியனிடம் சென்று, சிவனை நோன்பு இருந்து வணங்கினால் குழந்தை வரம் கிடைக்கும் என்று கூறுவதையும் நோக்குதல் அவசியமாகும். முதலில் அப்பெண் சைவ மதத்திற்கு கொண்டுவரப்பட்டு, அப்பெண்ணின் மூலம் அதிகாரத்தை தன் கட்டுப்பாட்டில் கொண்டு வரும் முறையாகும்.

தமிழகத்தில் கி.பி. ஆறாம் நூற்றாண்டிற்குப் பின்னர் சைவ - வைணவ போட்டி ஏற்பட்டு, சமண பௌத்த சமயங்கள் செல்வாக்கு இழந்த காலத்தில் திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் போன்றோர் சைவ அடியார்களைப் போற்றி மன்னர்களைத் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டுவந்த வரலாற்றின்

அடிப்படையிலேயே இந்நிகழ்வு உள்வாங்கப்பட்டிருக்க வேண்டும். இவர்களின் காலத்தில்தான் சிவன் முதன்மைப்படுத்தப்பட்டு, சிவனாலே எல்லாம் கிடைக்கும், அவனே மேலானவன் என்ற சிந்தனை தமிழ் சமூகத்தில் விதைக்கப்பட்ட சூழலே கோவிலன் சரித்திரத்தில் வர்ணமாலை என்ற பெண்ணோடு பொருத்தப்பட்ட சூழல் எனலாம். இது கேரளச் சமூகத்தில் கதைப்பாடலின் மூலம் நிலைத்து நிற்பதை உணரலாம்.

"அன்பே சிவம் என்ற மாணிக்கவாசகர், அப்பர், சம்பந்தர் கொண்ட சைவசமயத்திற்கும் மலைக்கும் மடுவிற்கும் உள்ள வேறுபாடு காணலாம். எனினும் இக்கிளையினரின் கொள்கைகள் பல தேவாரப்பதிகங்களில் புகுந்துவிட்டன. அஃது அக்கால நிலையேயன்றி வேறன்று. சமண - பௌத்த சமயங்களை அடக்கத் தொடங்கிய பழந்தமிழ்ச் சைவம் ஒருபால் வைதீகத்தையும் மறுபால் இக்கிளைகளையும் தழுவி இவற்றின் துணைக்கொண்டு அவற்றை அடக்கிவிட்டன என்பது நன்கு தெரிகிறது" என்று மா. இராசமாணிக்கனார் கருதும் கருத்துநிலையின் அடிப்படையிலேயே கதைப்பாடலுடன் மேற்கண்ட வர்ணமாலை பெண்ணின் புராணம் இணைக்கப்பட்ட முறையெனலாம். இது சிவன் மேலானவன் என்ற சிந்தனையின் அடிப்படையில் புகுத்தப்பட்ட புராணக்கதை என்றே கருத வேண்டியுள்ளது (Rasamanikkanar, 2013).

"கி.பி. 7 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஞானசம்பந்தர் வாழ்ந்தார்" என்று வே. தி. செல்வம் தன்னாய்வில் குறிப்பிடுவதைக் காணலாம் (Selvam, 2016). அப்பர், சம்பந்தர் இருவரும் ஒரே காலகட்டத்தில் வாழ்ந்தவர் என்பதால் கிட்டத்தட்ட இந்த நூற்றாண்டிலேயே இத்தொன்மம் கதைப் பாடலோடு இணைந்திருக்க வேண்டும். சமண - பௌத்த மதங்களின் எதிர்வினையாடல்கள் சோழ, பாண்டிய நாடுகளில் மட்டுமில்லாமல், சேர நாட்டிலும் இருந்துள்ள வரலாற்றை இதன்மூலம் மீட்டுருவாக்கம் செய்யலாம். இக்காலகட்டத்திலும் தமிழ் சார்ந்த சமூகப் பண்பாட்டுக் கூறுகள் சேர நாட்டில் இருந்துள்ளது என்பதின் அடையாளமாகவும் இதனைக் கருதலாம்.

மேலும், அக்கதையில் தனக்கு பிள்ளை வரம் தராத காளியைப் பாண்டிய மன்னன் வழிபட மறுத்து அதனை பூட்டி வைக்கும் நிகழ்வையும் நோக்க வேண்டும். ஆகவே, காளி என்பது மக்களிடையே பரவலாக்கம் பெற்றிருந்த தெய்வ வழிபாடாக இருந்திருக்கிறது. சிவனை முதன்மையாகக் கொண்ட சைவ சமய கருத்துக்கள் ஓங்கும் பொழுது நாட்டார் தெய்வ வழிபாட்டிற்கு ஆளுகின்றவர்களால் தடையேற்றப்பட்ட சூழலலே இந்நிகழ்வு மறைமுக நிலையில் உணர்த்துவதை ஆராய்ந்து அறிய வேண்டியுள்ளது.

மக்கள் இதனால் சில மோதல்களைச் சந்திக்கும் சூழலும் உருவாயிக்க வேண்டும். ஏனெனில், காளி கோயிலுக்குப் பொது மக்கள் விளக்கு ஏற்றுவதைத் தடைசெய்து மன்னன் ஆணையிட்ட குறிப்பு இக்கதையில் இடம்பெறுகிறது. அவ்வாறு விளக்கு ஏற்றுபவர்களை அரசன் தண்டித்த நிகழ்வும் இதில் இடம்பெறுவதை உய்த்துணர முடிகிறது. இதன் விளைவாக சமூகத்தில் பல்வேறு குழப்பமான சூழ்நிலை உருவாயிருக்கவும் வேண்டும். ஆளும் வர்க்கம் கூறுகின்ற முறையினை அப்படியே பின்பற்ற வேண்டுமென்ற கட்டாயச்சூழல் அச்சமூகத்திற்கு இருந்த நிலையையே இந்நிகழ்வு காட்டுகிறது.

இதுபோன்ற சமூகப் பிரச்சனைகளைக் கூறுவதற்கு சிவன் - பார்வதி தொன்மம் பயன்படுத்தப்படுவதைக் காணமுடிகிறது. மூலக்கதைக்கு பொருத்தம் இல்லாத இத்தொன்மங்கள் இடைக்காலத்தில் தமிழ்ச்சமூகம் எதிர்கொண்ட பிரச்சனைகளை உள்ளடக்கியுள்ளது என்பதில் ஐயமில்லை. இப்பெரிய பிரச்சனைகளை மையநிலையில் சுருக்கி வேறொரு தொன்மமாக மாற்றியமைத்த முறையே சிவனை முதன்மையாகக் கொண்டு கூறப்பட்டுள்ள தன்மையாகும்.

சோழ, பாண்டிய நாடுகளில் ஏற்பட்ட மதப்பிரச்சனை சேர நாடான கேரளத்திலும் எதிரொலித்து இருந்தது என்பது இத்தொன்மத்தின் மூலம் மீட்டுருவாக்கம் செய்யப்படும் வரலாறாகும். இக்காலகட்டத்தில் தமிழகத்தின் சோழ, பாண்டிய நாடுகளில் எதிரொலித்த அரசியல் சமூக சமய தாக்கங்கள் சேர நாட்டிலும் ஊடுருவியுள்ளது என்பதே இவ்வரலாற்றுத் தொன்மத்தின் மூலம் கிடைக்கின்ற செய்தியாகும்.

உலகிலுள்ள ஜீவராசிகளைப் படைத்தது சிவன் என்ற கருத்து நிலையைப் பத்திரகாளிப்பாட்டில் காணமுடிகிறது. ஏழரை தங்கம் என்ற சமுத்திரத்தில் பூத்து இருக்கின்ற செந்தாமரை மலரினைக் கண்ட சிவன் பூமியை நோக்கி வருகிறார். பின் தன் தலையில் இருக்கும் கங்காதேவியை பூமியை நோக்கி பாயச் செய்து அனைத்து உயிர்களையும் படைக்கிறார் என்று கூறப்படுகிறது. பின்னர், பாலகனின் தந்தையைப் படைத்து வடக்கு கொல்லத்தில் குடியமர்த்துகின்றார். இது, இறைவன் உயிர்களைப் படைத்த தொன்மத்தோடு கூறப்படுவதை நோக்க வேண்டும்.

சிவன் உயிர்கள் அனைத்தையும் படைத்து வாழ்வித்தான் என்பது காலகாலமாக மக்களிடம் வழங்குகின்ற தொன்மையான கதையெனலாம். ஆயினும், இதில் கூறப்படும் பாலகனின் தந்தை

படைப்பு என்பது முக்கியமான கூறாகவே எடுத்துக்கொள்ள வேண்டும். ஏனெனில் சிவன் பாலகனின் தந்தையான மாரிராஜனைப் படைத்தது மட்டுமல்ல குடியமர்த்தவும் செய்கின்றார் என்பது ஆராய்ந்து நோக்க வேண்டிய கருத்துப் புலப்பாடு ஆகும். இது, கேரளாவில் காடுகளை அழித்து மக்களைக் குடியமர்த்திய நிலையினை எடுத்துக்காட்டும் தொன்மம் என்றே கருத வேண்டியுள்ளது. நாடோடியாக வாழ்ந்த மக்களினம் ஒரு காலத்தில் நிலையாகக் குடியமர்த்தப்பட்ட செய்தியை இது மறைமுக நிலையில் எடுத்தியம்புகிறது எனலாம்.

நாடோடி மக்களைக் கொல்லத்தில் குடியமர்த்தியிருக்கின்ற செயல் ஏதோ ஒரு காலத்தில் நிகழ்ந்திருக்கிறது என்பதே இதன் வாயிலாக அறிய கூடியதாகும். மேலும், இன்றைய கேரளம் ஒரு காலத்தில் கடலுக்கு அடியில் இருந்ததாகவும் அதனைப் பரசுராமன் வெளியில் கொண்டு வந்ததாகவும் ஒரு தொன்மம் இன்றளவும் கூறப்பட்டு வருவதைக் காணலாம். இந்தத் தொன்மமே குடியமர்த்தும் நிலையாக கதைப்பாடலில் மாற்றம் பெற்றுள்ளது என்ற கருத்துநிலை முடிவுக்கும் இடமுள்ளதை ஆராய்ந்து உணரமுடிகிறது. சிவன் பார்வதி தொன்மம் என்பது ஆரிய கலப்பினால் ஏற்பட்டது என்றாலும் அதற்குள்ளே பல்வேறு சமூக வரலாற்றினை மறைமுக நிலையில் பொதிந்து வைத்து உள்ளனர் என்றால் அது மிகையில்லை.

## கண்ணன் லிங்கத்தைக் கட்டி அணைத்துக் கொள்ளும் தொன்மக் கதை

இத்தொன்ம கருத்தாக்கம் என்பது சற்று முரண்பட்ட ஒன்றாகவும் இருக்கிறது எனலாம். ஏனெனில் சில சிக்கல் நிறைந்த பிரச்சனைகள் ஒன்றாக இதற்குள் இணைந்துள்ளது என்றே கருத வேண்டியுள்ளது. கோவிலன் சரித்திரம் என்ற கதைப்பாடலில் இத்தொன்ம கதையின் நிகழ்வு கூறப்படுவதைக் காணலாம். இந்நிகழ்வு பல்வேறு கருத்துநிலைச் சிக்கலுக்கு கொண்டு செல்லும் என்பது முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

பாண்டியன் காளி வழிபாட்டினைத் தடை செய்தது மட்டுமின்றி காளி கோயிலின் அனைத்து பூஜை முறையினையும் தடை செய்தான். மேலும், ஏழைக் கண்ணனால் விற்பதற்காகக் கொண்டுவரப்பட்ட அனைத்து பொருள்களையும் விற்பனை செய்ய தடை விதித்தான். இதனை எதிர்த்த பொதுமக்கள் வெட்டிக் கொல்லப்பட்ட கொடுஞ்செயல்களும் நடைப்பெற்றதைக் கதைப்பாடலே இயம்புகிறது.

இதில் கண்ணனைக் கொல்வதற்காக வீரர்கள் தேடியபொழுது கண்ணன் சிவலிங்கத்தைக் கட்டியணைத்துக் கொண்டு இருந்தான். இது காளி கோயிலின் உள்ளே நடந்த நிகழ்வாகக் கதைப்பாடல் கூறுகிறது. பல ஆண்டுகள் திறக்காமல் இருந்த காளிகோயில் திறந்து கிடப்பதைக் கண்ட வீரர்கள் உள்ளே சென்று கண்ட இந்நிகழ்வை அரசனிடம் கூறுகின்றார். இறுதியில் அரசனே கண்ணனைக் கொன்றதாகக் கதைப்பாடலில் இடம்பெறுவதைக் காணமுடிகிறது.

சிவலிங்கம் காளி கோயிலின் ஒரு அங்கமாக இருப்பதாகக் கதைப்பாடல் கூறுவதால், இவ்வழிபாடு காளிகோயிலுடன் இணைந்து இருந்ததைக் காட்டுகிறது. அதாவது செல்வாக்குப் பெற்ற வழிபாடு காளிவழிபாடாகவே இருந்துள்ளதை இதன்மூலம் உணரலாம். சிவனை முதன்மையாகக் கொண்டு சைவ மதவழிபாடு மேலோங்கும் பொழுது, சில இடர்பாடுகளைச் சந்திக்க வேண்டியுள்ள சமூக நிலையை இது உணர்த்துகிறது. அரசனை எதிர்த்து குரல் கொடுக்கும் மக்கள் இறுதியில் அவர்களையே சரண் அடையவேண்டியிருந்த நிலையை கண்ணன் சிவலிங்கத்தை கட்டியணைக்கும் நிகழ்வு உணர்த்துகிறது. மேலும், இது மார்க்கண்டேயன் புராணத்தில் லிங்கத்தைக் கட்டியணைத்து எமனிடம் இருந்து தப்பித்துக் கொள்ளும் நிகழ்வினுடைய தாக்கம் என்றாலும் மத பிரச்சனைகள் சமூகத்தில் மேலோங்கி இருந்த வரலாற்றை இந்நிகழ்வு மறைமுகமாகக் காட்டுகிறது எனலாம்.

பல நாட்களாக பூட்டிக் கிடந்த காளி கோயில் திறக்கப்பட்டது என்ற குறிப்பின் மூலம் இக்காளி வழிபாட்டை மீண்டும் கொண்டு வர வேண்டும் என்ற எண்ணம் மக்கள் மத்தியில் தோன்றியதும், அதனை அரசன் நிராகரித்த முறையையும் உணர்த்தும் விதமாக இது அமைகிறது. அவ்வாறு செய்கின்றவர்களை அரசனே கொலை செய்கின்ற நிகழ்வும் அரங்கேறியிருக்கிறது. இத்தொன்மத்தின் வாயிலாகப் பல்வேறு சமூகப் பிரச்சனைகளை அக்கால சமூகம் சந்தித்து இருந்ததை மீட்டுருவாக்கம் செய்ய இயலுகிறது எனலாம்.

கதைப்பாடலின் இந்நிகழ்வு கூறப்படுவதற்குக் காரணம் மக்கள் மத்தியில் எடுத்துச் சொல்வதற்காக இருக்கலாம். பல்வேறு சூழல்களில் மக்கள் அரசனின் முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்தவாறு இருந்தனர். ஆயினும், அரசன் அடக்கு முறையைக் கையாண்டு மக்களை ஒடுக்கியுள்ளான் என்பதை தெள்ளத்தெளிவாக எடுத்துக்காட்டுவதை உணரமுடிகிறது. அதிகாரத்தை எதிர்த்து மக்களால் வாழமுடியாத சூழ்நிலையே அக்காலத்தில் இருந்திருக்கிறது.

நாட்டார் வழிபாடுகள் மறுக்கப்பட்டு ஆரியர்களின் எழுச்சியினால் முதன்மைப்படுத்தப்பட்ட வழிபாட்டு முறைகள் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியுள்ளது. இதனை மக்கள் ஏற்றுக் கொள்ளாத நிலையில் சமூகம் சில பண்பாட்டு மோதல்களைச் சந்தித்துள்ளது எனலாம். நாட்டார் தெய்வங்களின் மகிமை குறைந்து வந்ததை இக்கதையாடல் எடுத்து இயம்புகிறது. இது அக்காலத்தின் சமூகப்பிரச்சினையாக உருவாதலும் மக்களால் அரசனின் செயல்பாட்டுடனையே செல்ல முடிந்த வாழ்க்கைச் சூழலையும் உணர்த்துகிறது.

## மகாதேவன் முட்டை விழுங்கும் கதை

மகாதேவன் முட்டை விழுங்கும் ஒரு நிகழ்வும் தோற்றம் பாட்டில் பாடப்படுவதைக் காணமுடிகிறது. பத்திரகாளி தோன்றுகின்ற வரலாற்றைக் கூறுவதற்கு இக்கதை கூறப்படுவதை நோக்கலாம். அதாவது, ஒரு பனை மரத்தில் ஆண் மற்றும் பெண் குயில்கள் அமர்ந்து இருக்கின்றது. அந்நேரத்தில் பெண் குயில் ஒரு முட்டை இடுகிறது. முட்டை உருண்டு பார்கடலில் விழுகிறது. அதனை ஒரு மீன் உண்ண அம்மீனை முக்குவன் பிடிக்கிறான். பின் முக்குவத்தி அம்மீனை அறுக்கும்பொழுது முட்டை வெளிவருகிறது. அதனைக் கையில் வைத்திருக்க முடியாமல், இவர்கள் அரசனிடம் கொடுக்கின்றனர்.

இதனடையில் தீய சகுனங்களும் நடக்கிறது. அரசன் இதனை மகாதேவனின் முன்பு காட்சிக்கு வைக்கிறார். அம்முட்டையை மகாதேவன் விழுங்குகிறார். மகாதேவன் விழுங்கிய முட்டையானது அவரது உடலினுள் செல்லும் போது விலா எலும்பில் மோதி உடைபட்டு பத்திரகாளி பிறப்பதாகக் கதை அமைகிறது.

இக்கதை உலக உருவாக்கத்தைக் காட்டுகிறது எனலாம். அதாவது, சூரியனிடமிருந்து வெடித்து சிதறிய துகள்களே இன்று ஒவ்வொரு கோள்களாகக் காட்சியளிக்கின்றன. இத்தொன்மத்தின் அடையாளமே முட்டையாகும். முட்டை என்பது உயிரினை உருவாக்குகின்ற கருவியாகும். அதற்குள் உயிர் வாழ்கிறது என்ற அடிப்படையினை நோக்குதல் வேண்டும். இக்கோள்களிலும் உயிர் இருக்கின்றது என்ற கருத்து நிலையை இது உணர்த்துகிறது. பூமியில் உயிர்கள் வாழ்வை மையமிட்ட கதையாடல் என்றே கருத வேண்டியுள்ளது. ஆண், பெண் இரண்டு உயிரினங்கள் என்பது உயிர்களின் அடிப்படை ஆகும். எல்லா உயிரினங்களிலும் ஆண், பெண் என்ற கருத்தாடலே உயிர்களைப் பெருக்குகின்ற தன்மை கொண்டதாக இருக்கிறது. இவ்விரண்டு கருத்தாடலும் உயிர் உண்டாக்கத் தேவையான அடிப்படையாகும்.

கடல் என்ற கருத்துநிலை முக்கியத்துவமான ஒன்றாகும். உயிர்கள் முதன்முதலில் கடலில்தான் உருவாகியிருப்பதாக அறிவியல் அறிஞர்கள் கருதுகின்றனர். இத்தொன்மமே கடலில் முட்டை விழுகின்ற நிகழ்வாகும். இதனடிப்படையிலேயே மீன் என்ற உயிரினமும் இக்கதையில் கூறப்படுகிறது. பறவை, மீன் இவைகள் கூறப்பட்ட பின்பே மனிதன் என்ற கருத்தாடல் வருவதை நோக்கவேண்டும்.

ஆகவே, இவ்வுலகில் மனிதன் தோன்றுவதற்கு முன்பே தோன்றிய உயிரினங்கள் இவை ஆகும். இக்கருத்தை துல்லியமாக இக்கதையில் பதிவிடுவதை ஆராய்ந்து நோக்க வேண்டும். மனிதன் தோன்றிய பிறகே அரசு அதிகாரம் போன்றவற்றை உருவாக்கியிருக்கிறான் என்ற தொன்மமே முக்குவன் அரசனிடம் முட்டை கொடுக்கும் நிகழ்வாகும். ஒரு வரலாறு இன்னொருவருக்கு கைமாறும் நிகழ்வை மையமிட்ட பகுதியாகும். இறுதியில் முட்டை உடைபட்டு பத்திரகாளி தோன்றுவதாகத் தோற்றம்பாட்டின் கதையுடன் இணைக்கப்பட்ட சூழ்நிலையைக் காணமுடிகிறது.

உலகம் எவ்வாறு உருவாகி அதன் பரிணாம வளர்ச்சி நிலையை அடைந்தது என்ற தொன்மக் கதையினை விளக்குகின்ற தொன்மமே மகாதேவன் முட்டை விழுங்கும் தொன்மக் கதையாடலேயாகும். ஒன்று இன்னொன்றுடன் இணைகின்ற சூழல், அனைத்து சமூகங்களிலும் காணப்படுகின்ற பன்முக தன்மையாகும். அவ்வகையில் கேரளச் சமூகமும் இத்தொன்மத்தைத் தோற்றம்பாட்டு என்ற கருத்து நிலைக்குள் உட்படுத்திக் கொண்டுள்ளது எனலாம். இவை சமூகத்தின் கட்டமைப்பான பாங்கு என்றே கருத வேண்டியுள்ளது.

இக்கதையில் முட்டை மீனின் உடலுக்குள் இருந்து எடுக்கப்பட்ட பொழுது தீய சகுனங்கள் நடந்ததாகப் படைக்கப்பட்ட தொன்மம் என்பது பிரளயத்தைக் குறிப்பதாகும். இவ்வுலகில் நிலப்பகுதியில் உயிரினங்கள் உருவாகாத முன்பு, நிலம் பனிக்கட்டிகளால் சூழப்பட்டிருந்ததாகக் கூறப்படுகிறது. இதனிடையே வெள்ளப்பெருக்கு உண்டாகி பல வருடங்கள் மழை பெய்து, நீர் உருவாகி இதன்மூலம் உயிர்களின் தோற்றம் ஏற்பட்டு இருக்கின்றது என்ற அறிவியல் ஆய்வாளர்களின் ஆழமான கருத்து இதற்குள் மறைந்துக் கிடப்பதை நோக்க வேண்டும்.

ஆகவே, மகாதேவன் முட்டை விழுங்கும் நிகழ்வு என்பது, உலகம் தோன்றிய முறையும் அதில் உயிர்கள் எவ்வாறு தோன்றியது அதன் பரிணாமம் என்ன என்பதையும் விளக்கும் வரலாற்றுத் தொன்மமே இக்கதையாடல் என்ற முடிவுக்கு வர இயலுகிறது. இதில் கூறப்படுகின்ற ஒவ்வொரு நிகழ்வும் ஒரு பெரிய வரலாற்றின் தொன்மத்தைக் கொண்டதாக அமைகிறது. உலகத் தோற்றத்தைக் கேரளச் சமூகம் எவ்வாறு உள்வாங்கி, தொன்மமாகப் பாதுகாத்து வருகின்றது என்ற அடையாளமே இக்கதை என்பதை உறுதி செய்ய இயலுகிறது.

இக்கதைகளை ஒட்டுமொத்தமாக வரலாற்று மீட்டுருவாக்க நிலையில் அணுகும் பொழுது, இக்கதையின் நிகழ்வுகள் ஏதோ ஒரு காலத்தில் நடைபெற்றதாக இருக்கிறது. எனவேதான், இது சமூகத்தில் பரவலாக்கம் அடைந்துள்ளது என்ற வரலாற்று உண்மையையும் உணரலாம். கணவன், மனைவி என்ற இருவர் செல்வ செழிப்போடு வாழ்ந்து இடையில் பொருள் இழப்பு ஏற்பட்டுள்ளது. தங்கள் பிழைப்பு ஆதாரத்தைத் தேடி மதுரைக்கு வருகின்ற பொழுது கணவன் சூழ்ச்சியினால் கொல்லப்படுகிறான். இதனால் மனைவி கோபம் அடைந்து அரசனையே எதிர்க்கும் ஆற்றல்பெற்றவளாக வாழ்ந்திருக்கிறாள்.

இவ்வரலாறு என்பது பாண்டியர்கள் மதுரையை ஆட்சி செய்த காலகட்டத்தில் நிகழ்ந்துள்ளது என்ற வரலாறு உண்மையாக இருந்திருக்கிறது. அப்பெண் பிற்காலத்தில் தெய்வமாக வணங்கப்பட்ட நிலையை மறைமுக நிலையில் இக்கதைப்பாடல்கள் விளக்குகின்றன எனலாம். இது கேரளச் சமூகத்தில் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பது முக்கியமானதாகும்.

இன்றும் கேரளத்தில் தமிழர்களைப் பாண்டி என்று கூறுகின்ற வழக்கம் காணப்படுகிறது. இச்சொல்லை இழிசொல்லாகவே கேரள மக்கள் கூறுகின்றனர். பாண்டியன் இழைத்த அநீதி காரணமாக கண்ணகி மிகுந்த துன்பத்தை அனுபவித்தாள் என்ற தொன்மம், கேரள மக்களிடையே தமிழரை இழிவு படுத்தும் சொல்லாக மாறியுள்ளதை இதன்மூலம் அறியும் வரலாற்று எச்சமாகும். பாண்டியன் என்ற பெயரே கொடுமைக்காரன் அல்லது ஏமாற்றுக்காரன் என்ற பின்னணியில் கேரளச் சமூகம் உள்வாங்கியுள்ள பண்பாட்டுத் தளத்தை உணரமுடிகின்றது.

பழங்குடி மக்கள் முதல் பண்பட்ட நவ நாகரீகச் சமூகம் வரை இக்கதையாடல் நிகழ்வது அதன் வரலாற்று உண்மையை விளக்கும் நோக்கில் அமைகிறது. ஒவ்வொரு சமூகமும் தான் வரலாற்றில் சந்தித்த பல்வேறு சிக்கல்களை இக்கதைப் பாடல்களுடன் இணைத்துக்கொண்டு ஒவ்வொரு தலைமுறையினரிடத்தும் நகர்த்திக் கொண்டு வருகின்றன என்பதை இதன்மூலம் உணரலாம்.

## முடிவுரை

ஏதேனும் ஒரு சூழலில் இறக்கின்ற பெண்கள் பெரும்பாலும் தெய்வமாக்கப் படுகின்ற தமிழக வரலாற்று நிகழ்வின் தாக்கம் கேரள மக்களிடமும் இருந்துள்ளதை உணரமுடிகின்றது. தமிழகத்தில் நிலவிய சமயப்போர் கேரளத்திலும் இருந்துள்ளது. பிற மதங்களின் வருகையால் பூர்வீக வழிபாடு அதிகார வர்க்கத்தினராலே தடை செய்யப்பட்டுள்ள சூழல் இருந்துள்ளது. அனைத்து சமூகங்களிடமும் இருக்கும் உலகத்தோற்றம் குறித்த கதையாடல் கேரளச் சமூகத்திலும் காணப்படுகின்றது. கேரளத்தில் பாடப்படும் அனைத்து கதைப்படல்களும் அடிப்படையில் ஒரே கதையமைப்பைக் கொண்டுள்ளது என்ற தெளிவாக முடிவுக்கு வர இயலுகிறது. இக்கதைப்பாடல்களில் வரும் இக்கதைகள் பழங்குடி சமூகம் முதல் நாகரிக சமூகம் வரை பரவிக் காணப்படுவதால் ஒரு மிகப் பழமையான கதையாடல் என்ற தீர்க்கமான முடிவுக்கு வரமுடிகிறது. கேரளத்தில் இக்கதையாடல் சார்ந்த தொன்மம் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி சமூகத்தின் அடிநிலைப் பண்பாடாக மாறியுள்ளது.

## References

Dhananjayan, (2015) Vilimbu nilai Makkal valakarukal (Inavaraiyiyal Aivu), New Century Book house, Chennai, India

Naseemdeen, P. (1992) Kovilan Saritharam, Annam Publication, Sivakanga, India

Rasamanikkanar, M. (2013) Pallavar Varalaru, Paavai Publications, Chennai, India

Sakthivel, S. (2010) Natupura Iyal Aivu, Manivasagar Pahtipagam, Chennai, India

Selvam, V.T. (2016) Tamilaga varalarum Makkal Panpadum, Manivasagar Pahtipagam, Chennai, India

Shanmugasundaram, S. (1989) Natupura Iyal, Manivasagar Pahtipagam, Chennai, India

Sivasubramaniyan, A. (2016) Adithala Makkal Varalaru, New Century Book house, Chennai, India

## Conflict of interest

The Author's has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

## About the License

© The Author 2026. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

## Cite this Article

Uma Maheswari, Kerala Kannagi Story Ballads: A Historical Reconstruction Approach, Vol 7, Iss 1, (2025) 1-10. DOI: https://doi.org/10.54392/ijmrd2611